செ.வெ.எண்.07 நாள்.04.01.2018.

திருநெல்வேலி மாநகராட்சி கே.டி.சி.நகர் வெல்கம் காலனி மற்றும் முகாம்பிகை நகர் பகுதிகளில் மாநகராட்சியின் மூலம் நடைபெற்று வரும் மெகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

-------

திருநெல்வேலி மாநகராட்சி கே.டி.சி.நகர் வெல்கம் காலனி மற்றும் முகாம்பிகை நகர் பகுதிகளில் மாநகராட்சியின் மூலம் நடைபெற்று வரும் மெகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.01.2018) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

சுத்தமாக இல்லாத வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார். மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மெகா துப்புரவு பணி மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். நீண்ட நாட்களாக பூட்டப்பட்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, வீடுகளை திறந்து கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியாளர்களிடம் கொசு புழு ஒழிப்பு பணிகளில் மிகுந்த கவனத்துடன் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும், கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். மேலும், அப்பகுதி பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் டெங்கு விழிப்புணர்வு குறித்து எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், சுகாதார அலுவலர் திரு.சுப்பிரமணியம், சுகாதார ஆய்வாளர் திரு.இளங்கோ உள்பட சுகாதாரத் துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.